<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

ம.சா. 5 தேதி.04.09.2024

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 319/2019 | | |
| பெயர் | எஸ். ஜெயராஜ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் சென்னை மியாட் மருத்துவ மனையில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் சொல்வதற்காக அழைப்பானை எங்கள் மருத்துவ மனைக்கு வரப்பட்டதன் பேரில் எங்கள் மருத்துவ மனை அதிகாரி என்னை சாட்சியம் அளிக்க அனுமதி அளித்துள்ளார். அதற்கான அதிகார கடிதம் சா.சா.ஆ. 3 ஆகும். எங்களது மருத்துவ மனையில் உள்நோயாளி எண்.170604947 எண்ணில் சிகிச்சைக்கா சேர்ந்திருந்த திரு. கார்த்தி என்பவரது மருத்துவ ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க அழைப்பானை வரப்பட்டது. கார்த்தி என்பவர் 22.06.2017 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் சாலை விபத்து ஏற்பட்ட காயத்திற்காக அனுமதிக்கப்பட்டார். அவர் கை, கால் செயல் இழந்த நிலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு கழுத்து முதுகு தண்டு எலும்பில் c5 எலும்பு முழுவதுமாக நொறுங்கி இருந்தது. c5 எலும்பு நொறுங்கியதுடன் நகர்ந்தவாறு இருந்தது. கழுத்தில் உள்ள c1 எலும்பு நகராமல் உடைந்துள்ளது. c7 எலும்பில் இடது பக்கமாக நகர்ந்ததுடன் நொறுங்கியும் உள்ளது. கழுத்து எலும்பில் 2 வது எலும்பில் இருந்து விளா எலும்பு வரையில் கண்ணிய நிலையில் இருந்தது. இடது புருவத்தில் எலும்பு முறிவு இருந்தது. தலையில் சிராய்ப்பு காயம் இருந்தது. மேற்கண்ட எலும்பு முறிவுகளுக்கு c4 முதல் c6 வரையில் அதனை நிலைப்படுத்தி பிளேட் பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர் விடுவிக்கப்பட்ட போதும் கை, கால் செயல் இழந்த நிலையில் தான் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் விடுவிக்கப்பட்ட ஒருவருக்கு இருதய அடைப்பு நேரடியாக வர வாய்ப்பு இல்லை. எங்கள் மருத்துவ மனையில் பரிந்துரைத்த மருந்தில் எனாக்ஸ்பரின் சோடியம் என்ற ஊசி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஊசி படுக்கையாக உள்ளவருக்கு இரத்த உறைதல் ஏற்படாமல் இருக்க பரிந்துரைக்கப்படுகிறது. இரத்தம்

உரைதலால் இருதயம், மூளை, நுரையீரல் ஆகியவற்றில் பின் விளைவுகள் வரலாம் அதை தடுக்க மேற்படி ஊசி போடப்பட்டுள்ளது. இரத்தகட்டு அடைப்பு ஏற்பட்டு, இருதய குழாயில் அடைப்பு ஏற்பட்டால் இருதய அடைப்பு ஏற்படும். இதனை கார்டியாக் அரஸ்டு என்பார்கள். எங்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்ந்த போது கார்த்திக் என்பவரின் வயது 30 என்று தகவல் கூறினார்கள். அவரை சிகிச்சைக்கு சேர்த்த போது அவருக்கு முந்தைய மருத்துவ வரலாறு எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை

நான் சிகிச்சை அளித்த மருத்துவர் அல்ல. நான் சிகிச்சை பெற்ற கார்த்திகை பார்த்தது இல்லை. அவரது மருத்துவ நிலை என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவருக்கு என்ன தேதியில் சாலை விபத்து ஏற்பட்டது என்றும், என்ன வகையாக சிகிச்சை முதல் முதலாக பாண்டிசேரி ஜிப்பர் மருத்துவ மனையில் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அவருக்கு எதனால் கை, கால்கள் செயல் இழந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நரம்பு மண்டலம் அடிப்பட்டதால் ஏற்பட்டிருக்கலாம் ஆனால் நேரடியாக தெரியாது. அதை மருத்துவ ஆவணங்கள் மூலமாக நரம்பு மண்டலம் அடிப்பட்டுள்ளதை தெரிந்து கொண்ட பின்னர் தான் யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். விபத்தில் ஏற்ப்பட்ட காயங்கள் தான் அவரது இறப்பிற்கு காரணம் என்னால் அறுதியிட்டு கூற முடியாது என்றால் சரிதான். எனாக்ஸ்பரின் சோடியம் என்ற ஊசி போட்ட பின்னரும் அவராருக்கு இருதய அடைப்பு வந்துள்ளதால் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அல்லாமல் வேறு காரணத்திற்காகவும் அவருக்கு இருதய அடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.